ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1407/23 - 2005 අගෝස්තු 26 වැනි සිකුරාදා - 2005.08.26

1407/23 ஆம் இலக்கம் - 2005 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

கட்டளை இல. 04

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

பிரிவு 18 இன் கீழான கட்டளை

வர்த்தக, வாணிப, பாவனையாளர் அலுவல்கள் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே ஆகிய நான், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையுடன் ஆலோசித்து பின்வரும் பொருட்கள் சமூகவாழ்வுக்கு மிகவும் இன்றியமையாதவை என அபிப்பிராயப்பட்டு 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச்சட்டத்தின் பிரிவு 18 இன் கீழ், 2005, செத்தெம்பர் 01ஆம் திகதியிலிருந்து வலுப்பெறும் வகையில் அவற்றை விதித்துரைக்கப்பட்ட பொருட்கள் என இத்தால் எழுத்தில் கட்டளையிடுகிறேன்.

விதித்துரைக்கப்பட்ட பொருட்களின் பட்டியல்:

1. சீமெந்து

ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே,
வர்த்தக, வாணிப, பாவனையாளர்
அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2005, ஓகத்து 15.

09-220/1

---

பணிப்புரை இல. 04

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

பிரிவு 10(1) இன் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 10(1) இனால் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்படுகின்ற, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை, உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகள் அனைவரும் 2003.08.25 ஆந் திகதிய 1303/1 ஆம் இலக்க 2004.01.21 ஆந் திகதிய 1324/18 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானி

அறிவித்தல்களின் அட்டவணையில் விதித்துரைக்கப்பட்ட பொருட்களின் நிறை/ அளவு மற்றும் உற்பத்தித் திகதி என்பவற்றை பொருளின்மீது, பொதியின் மீது அல்லது கொள்கலனின் மீது அல்லது அத்தகைய பொருட்களின் உறையின் மீது குறிக்கப்படுதல் வேண்டுமென பணிப்புரை வழங்குகிறது.

இப்பணிப்புரை 2005, செத்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி

டாக்டர் எம். ஐ. எம். முஹிசின்,
தவிசாளர்.

கொழும்பு,
2005, ஓகத்து 01.

09-220/2

---

பணிப்புரை இல. 05

## 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்

பிரிவு 10(1) இன் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 10(1) இனால் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்படுகின்ற, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, மின்சார மற்றும்/அல்லது இலத்திரனியல் நீண்டகால பாவனைப் பொருட்களின் உற்பத்தியாளர்கள் /வியாபாரிகள் /இறக்குமதியாளர்கள் அனைவருக்கும் அத்தகைய மின்சார அல்லது இலத்திரனியல் நீண்டகால பாவனைப் பொருட்கள், விற்பனைத் திகதியிலிருந்து ஆறு (06) மாத காலத்திற்கு குறையாத கட்டுறுத்து காலத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென பணிப்புரை வழங்குகிறது.

இப்பணிப்புரை 2005, செத்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து வலுப்பெறும்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி

டாக்டர் எம். ஐ. எம். முஹிசின,
தவிசாளர்.

கொழும்பு,
2005, ஓகத்து 01.

09-220/3

---

பணிப்புரை இல. 06

## 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்

பிரிவு 12(1) இன் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரச்சபைச் சட்டத்தின் பிரிவு 12 (1) ஆம் பிரிவினால் உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ் செயற்படுகின்ற, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, உற்பத்தியாளர் அல்லது வியாபாரி எவரேனும் எண்வகைப் பொருட்களை (அட பிரிகர) இலங்கை கட்டளைகள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட, இலங்கை நியமங்களின் எஸ்எல்எஸ் 1257, எஸ்எல்எஸ் 1258 என்பவற்றுடன் ஒத்திருப்பதன் உறுதிப்படுத்துகை மற்றும் எஸ்எல்எஸ் குறி (உற்பத்தி சான்றுப்படுத்தல் குறி) என்பன இல்லாமல் அத்தகைய பொருட்களை உள்நாட்டில் உற்பத்தி செய்யவோ, விற்பனை

செய்யவோ அல்லது விற்பனை செய்வதற்கு முயலவோ அல்லது விற்பனைக்காக சேமித்து வைக்கவோ முடியாது. என பணிப்புரை வழங்குகிறது.

இப்பணிப்புரை 2006, சனவரி 01 ஆந் திகதிமுதல் வலுப்பெறும்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி

டாக்டர் எம். ஐ. எம். முஹிசின்,
தவிசாளர்.

கொழும்பு,
2005, ஓகத்து 01.

09-220/4

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.